admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தின கனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்

தின கனி காலை நாளிதழ்
மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை
Call : 044-22772060
9443699066




| Vol: 03 | Issue: 233 | 4 Pages | 01.07.2026 | Wednesday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 03 | இதழ்: 233 | 4 பக்கங்கள் | 01.07.2026 | புதன்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |



**இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்**
**கெடுப்பா ரிலானுங் கெடும்**

**விளக்கம்:**
கடிந்து அறிவுரைக் கூறும் பெரியாரின் துணை இல்லாதக் காவலற்ற அரசன், தன்னைக் கெடுக்ககும் பகைவர் எவரும் இல்லாவிட்டாலும் கெடுவான்.

# பெண்கள் பாதுகாப்பில் கூடுதல் கவனம்: 2ம் நாள் மாநாட்டில் முதல்அமைச்சர் விஜய் அறிவுறுத்தல்

சென்னை, ஜூலை1

ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ் அதிகாரிகள் மாநாட்டில் சட்டம்ஒழுங்கு, பெண்கள் பாதுகாப்பில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று முதல்அமைச்சர் விஜய் அறிவுறுத்தினார்.




தமிழகத்தில் ஆண்டுதோறும் மாவட்ட கலெக்டர்கள் மற்றும் போலீஸ் அதிகாரிகள் மாநாடு நடத்தப்பட்டு, சட்டம்ஒழுங்கு, அரசின் நலத்திட்டங்கள் மற்றும் நிர்வாக நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆய்வு மேற்கொள்ளப்படுவது வழக்கம்.

அதன்படி, முதல்அமைச்சர் விஜய் தலைமையில் 2 நாள் மாநாடு நேற்று தொடங்கியது. முதல் நாளில் நடைபெற்ற இரு அமர்வுகளில் மாவட்ட கலெக்டர்கள்,

போலீஸ் அதிகாரிகள் மற்றும் அரசுத் துறைகளின் செயலாளர்கள் பங்கேற்று பல்வேறு நிர்வாக அம்சங்கள்குறித்து ஆலோசனைநடத்தினர்.

மாநாட்டின் 2வது நாள் கூட்டம் இன்று காலை சென்னை தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்றது. இதில் மாவட்ட கலெக்டர்கள், வனத்துறை உயரதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## வாட்ஸ் அப்பில் புது வசதி..இனி போன் நம்பர் தேவையில்லை.. யூசர்நேம் போதும்



சமூக வலைத்தளங்களில் முன்னணி வகிக்கும் செயலியாக வாட்ஸ் அப் உள்ளது. வாட்ஸ் அப் பயன்படுத்தாத ஸ்மார்ட் போன் யூசர்களே இல்லை என சொல்லும் அளவிற்கு தற்போது அதன் பயன்பாடு அதிகரித்துள்ளது. இந்தியாவில் மட்டும் 50 கோடிக்கும் மேற்பட்டவர்கள் வாட்ஸ் அப் பயன்படுத்தி வருகிறார்கள். வாட்ஸ் அப்நிறுவனம்சந்தையில்போட்டியை சமாளிக்கவும்பயனர்களைதக்கவைக்கவும்அவ்வப்போதுபுதியஅப்டேட்களை வெளியிட்டு வருகிறது.

அந்த வகையில் பயனர்கள் நீண்ட காலம் எதிர்பார்த்த ஒரு அப்டேட் வெளியாகியுள்ளது. அதாவது வாட்ஸ் அப்பில், இனி போன் நம்பர் இல்லாமல் யூசர் நேம் வைத்தே பயன்படுத்தலாம். பயனர்களின் தனிப்பட்ட விவரங்களை பாதுகாக்கும் வகையில் இந்த வசதி அறிமுகம் ஆக உள்ளது. இந்த வாரத்தில் இருந்தே பயனர்கள் விருப்பமான பெயர்களை முன்பதிவு செய்யலாம் என்றாலும், இந்த வருட இறுதிக்குள் அனைத்து பயனர்களுக்கும் இந்த வசதி செயல்பாட்டிற்கு வரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வாட்ஸ் அப்பில் Settings > Account > Username வழியாக பெயரை ரிசர்வ் செய்யலாம். இந்த புதிய அம்சம் அறிமுகமான பிறகு, பயனர் பயனர்பெயர் (Username) வசதியை பயனர் பயன்படுத்தியிருந்தால், முதல் முறையாக யாராவது செய்தி அனுப்பும்போது பயனரின் தொலைபேசி எண் மற்றவர்களுக்கு தெரியாது. பயனர்களின் தனியுரிமையை மேலும் வலுப்படுத்தும் நோக்கில் வாட்ஸ்அப் கொண்டு வரவுள்ள புதிய அம்சமாக இது கருதப்படுகிறது.

## பரதநாட்டியத்தில் உலக சாதனை படைத்த 6 வயது சிறுமி



இலங்கை, ஜூலை 1

இலங்கையின் கிளிநொச்சியைச் சேர்ந்த கவிஞர் ரஜீவனின் மகளான 6 வயது சிறுமி ரஜீவன் கம்சத்வனி இரண்டரை மணி நேரம் தொடர்ச்சியாக பரதநாட்டியம் ஆடி உலக சாதனை படைத்துள்ளார்.

'ராபா உலக சாதனை புத்தகத்தில்' இச்சாதனை பதிவு செய்யப்பட்ட நிலையில், சிறுமிக்கு "உலக நாட்டிய இளவரசி" என்ற மகுடம் சூட்டி கௌரவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் ராபா உலக சாதனை புத்தக நிறுவனத்தின் இலங்கை நாட்டுத் தூதுவர் கலாநிதி யோகதாசன் யூட் நிமலன், ராபா உலக சாதனை புத்தக நிறுவனத்தின் கிளிநொச்சி மாவட்ட தலைவர் கலாநிதி சிவனேஸ்வரன் விஜிதா ஆகியோர் நடுவர்களாக பங்கேற்றனர்.

## காசா மீது இஸ்ரேல் தாக்குதல் 8 பேர் பலி



காசா முனையை நிர்வகித்துவரும்ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த 2023ம் ஆண்டு அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாத தாக்குதல் நடத்தினர். இந்த தாக்குதலில் 1,200 பேர் கொல்லப்பட்டனர். மேலும், 251 பேர் பணய கைதிகளாக கடத்தி செல்லப்பட்டனர்.

இதையடுத்து ஹமாஸ் ஆயுதக்குழுவினர் மீது போர் அறிவித்த இஸ்ரேல் அதிரடி தாக்குதல் நடத்தியது. இந்த போரில் காசாவில் 73 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். இதையடுத்து, இரு தரப்பிற்கும் இடையே அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது. அதேவேளை, காசா முனையில் செயல்பட்டு வரும்ஹமாஸ்ஆயுதக்குழுவினரைகுறிவைத்துஇஸ்ரேல்தொடர்ந்துதாக்குதல் நடத்தி வருகிறது.

இந்நிலையில், காசா முனை மீது இஸ்ரேல் நேற்று தாக்குதல் நடத்தியது. காசாவின்கான்யூனிஸ், மத்திய காசா, தெற்கு காசா பகுதிகளில் இஸ்ரேல் நேற்று டிரோன்தாக்குதல் நடத்தியது. இந்த தாக்குதலில் 8 பேர் உயிரிழந்தனர். மேலும், 20 பேர் படுகாயமடைந்தனர்.

இந்த தாக்குதல் ஹமாஸ் ஆயுதக்குழுவினரை குறிவைத்து நடத்தப்பட்டதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. அதேவேளை, இந்த தாக்குதலில் 2 குழந்தைகள் உள்பட 8 பேர் கொல்லப்பட்டதாக ஹமாஸ் கட்டுப்பாட்டில் இயங்கும் காசா சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

## உக்ரைன் போரின் தாக்கம் பறவைகளுக்கும்: பைபர் ஆப்டிக் கேபிள்களால் கூடுகட்டும் அவலம்

கீவ், ஜூலை 1

உக்ரைனில் நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்து வரும் போர், மனிதர்களின் வாழ்க்கையை மட்டுமல்லாமல், அங்குள்ள பறவைகளின் இயற்கை வாழ்விடத்தையும் பாதித்திருப்பதாக புதிய ஆய்வு ஒன்றில் தெரியவந்துள்ளது.

போர் தீவிரமாக நடைபெற்று வரும் பகுதிகளில் இருக்கும் இரண்டு பறவை கூடுகளை ஆய்வு செய்த ஆராய்ச்சியாளர்கள், அவை புல் மற்றும் பைபர்ஆப்டிக் கேபிள்களைக் கொண்டு கட்டப்பட்டிருப்பதை கண்டறிந்துள்ளனர்.

மின்னணு ஜாமிங் (Electronic Jamming) தாக்கத்திலிருந்து தப்பிக்கும் வகையில், வான்வழி தாக்குதல் டிரோன்களை இயக்குவதற்காக உக்ரைன் மற்றும் ரஷ்ய ராணுவங்கள்பைபர்ஆப்டிக் கேபிள்களை பரவலாக பயன்படுத்தி வருகின்றன. போரின் போது அறுந்து சிதறிக்கிடக்கும் இந்த கேபிள்களையே பறவைகள் தற்போது கூடுகட்டும் பொருட்களாக பயன்படுத்தத் தொடங்கியுள்ளன.

இது, போரால் இயற்கைச் சூழலில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும், சுற்றுச்சூழல் அமைப்பில் உருவாகி வரும் பாதிப்புகளையும் வெளிப்படுத்துவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். போர் மனித உயிர்களையும் கட்டமைப்புகளையும் மட்டுமின்றி, வனவிலங்குகள் மற்றும் பறவைகளின் இயற்கையான வாழ்வியலையும் மாற்றி வருவது கவலைக்குரியதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் அறிவியல் மன்றத்தின் சார்பில் சிறு கோள்கள் தினம் கடைபிடிப்பு



கந்தர்வ கோட்டை ஒன்றியம் அக்கச்சிப்பட்டி நடுநிலைப் பள்ளியில் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் அறிவியல் மன்றத்தின் சார்பில் சிறு கோள்கள் தினம் கடைபிடிப்பு.

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டை ஒன்றியம் அக்கச்சிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் அறிவியல் மன்றத்தின் சார்பில் சிறுகோள்கள் தினம் கடைபிடிக்கப்பட்டது. மாணவர் மன்றத்தின் தலைவர் கிருத்திகா அனைவரையும் வரவேற்றார். இந்நிகழ்வினை ஒருங்கிணைத்த தமிழ்நாடு அறிவியல் இயக்க கந்தர்வக்கோட்டை ஒன்றிய தலைவரும், அறிவியல் பட்டதாரி ஆசிரியர் ரகமதுல்லா சிறு கோள்கள் குறித்து பேசும் பொழுது ஆண்டுதோறும் ஜூன் 30 அன்று சர்வதேச

சிறுகோள் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது. நம் சூரியக் குடும்பத்தில் கோள்கள் மட்டுமன்றி சிறுகோள்களும் சுற்றி வருகின்றன. இந்தச் சிறுகோள்கள் சூரியக் குடும்பம் உருவானபோது சிதறடிக்கப்பட்ட வான்பொருள்களால் உருவானவை. இவை கோள்களைப் போன்று ஒரு குறிப்பிட்ட வடிவம் கொண்டவை அல்ல. வடிவிலும் அளவிலும் வித்தியாசமானவை. சிறு பந்து அளவிலிருந்து சிறு நாடு அளவுக்கான சிறுகோள்கள் காணப்படுகின்றன. இந்தச் சிறுகோள்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படவும், இவற்றை அடையாளம் கண்டு ஆராய்ச்சிகளை மேற்கொள்ளவும், இவற்றிலிருந்து நம் பூமியைப் பாதுகாக்கவும் 'உலக சிறுகோள் நாள்' ஜூன் 30 அன்று கடைபிடிக்கப்படுகிறது. சிறுகோள்கள் சூரியக் குடும்பம் உருவான காலத்திலிருந்தே இருந்து வருகின்றன. செவ்வாய், வியாழன் கோள்களுக்கு இடையே லட்சக்கணக்கான சிறுகோள்கள் காணப்படுகின்றன. பூமிக்கு அருகிலும் சிறுகோள்கள் இருக்கின்றன. அவையும் சூரியனைச் சுற்றி வருகின்றன. இந்தச் சிறுகோள்கள் பாறைகளால் ஆனவை. இவற்றில் பல உலோகங்கள் இருக்கின்றன. இந்தச் சிறுகோள்களில் இருக்கும் உலோகங்களை பூமிக்குக் கொண்டு வருவதற்கான ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன என்று பேசினார். மாணவர்கள் கோள்கள் குறித்தும் கோள்களின் பயன்கள் குறித்தும் தெரிந்து கொண்டனர். இந்நிகழ்வில் கணித பட்டதாரி ஆசிரியர் மணிமேகலை உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



## போதைப்பொருள் பயன்பாடு மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினம்' மாணவர்கள் பேரணி

மீனாட்சி உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சி அகாடமி நிகர்நிலைப் பல்கலைக்கழகம் சார்பில் போதைப் பொருள் பயன்பாடு மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான மாணவர்கள் பேரணி சென்னை பெசன்ட்நகர் எளியட்ஸ் கடற்கரையில்

மீனாட்சி செயல்.முறை மருத்துவ கல்லூரி மற்றும் MAHERன் NSS பிரிவு இணைந்து, போதைப்பொருள்பயன்பாடு மற்றும் சட்டவிரோத கடத்தலுக்கு எதிரான சர்வதேச தினத்தை' முன்னிட்டு மாணவர்கள்பேரணியை மீனாட்சி செயல் முறை மருத்துவம் Mudalvar முனைவர் பேராசிரியர் Dr.தீபா சுந்தரேஸ்வரன் ஏற்பாட்டில்

கல்லூரியின் வேந்தர் ஜெயந்தி ராதாகிருஷ்ணன் புரவலர் R.கோமதி , இணை வேந்தர் ஆகாஷ் பிரபாகர் ஆகியோர்வழிநடத்தலில்நடைபெற்றது

இந்த மாணவர்கள் பேரணி நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக சென்னை மண்டல அலுவலக போதைப்பொருள் கட்டுப்பாட்டு பணியகம் கண்காணிப்பாளர், தீபக் கௌஷிக் பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்து பேசிய அவர் இந்த நாளின் முக்கியத்துவம், போதைப்பொருட்களை தவிர்க்கும் வழிகள், மற்றும் போதை இல்லாத சமூகத்தை உருவாக்குவதில் இளைஞர்களின் பங்கு குறித்து எடுத்துரைத்தார் மற்றும் நமது வீட்டில் உள்ளவர்களை போதைக்கு அடிமை ஆகாமல் பார்த்து கொள்ள வேண்டும் இனி வரும் சமூகத்திற்கு நீங்கள் முன்னோட்டியாக இருக்க வேண்டும் இங்கு பேரணியில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி என்று கூறினார்

இந்த பேரணியில் மீனாட்சி உயர் கல்வி மற்றும் ஆராய்ச்சி அகாடமி நிகர்நிலைப் பல்கலை க்கழகம் உறுப்பு கல்லூரிகளைச் சேர்ந்த 250 க்கும் மேற்பட்ட மாண வர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஆர்வ த்துடன் கலந்து கொண்டனர்.

போதைப்பொருள் இல்லாத தேசத்தின் அவசியத்தை பதாகைகள், முழக்கங்கள் மற்றும் போதைப்பொருள் துஷ்பிரயோகம் பற்றிய கட்டுக்கதைகளை உடைத்து உண்மைகளை விளக்கும்துண்டுப்பிரசுரங்கள்மூலம் வலியுறுத்தினர்.




## தவெக கூட்டணி கட்சிகள் கூட்டம் இடதுசாரி கட்சிகள் புறக்கணிப்பு

சென்னை,

தவெக கூட்டணி கட்சிகள் ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொள்ளப்போவதில்லை என இடதுசாரி கட்சிகள் தெரிவித்துள்ளன.



தமிழக அரசியலில் பரபரப்பான சூழல் நிலவி வரும் நிலையில், சென்னையை அடுத்த கோவளத்தில் நாளை முதல்அமைச்சர் விஜய் தலைமையில் தமிழக வெற்றி கழகம் (த.வெ.க.) சார்பில் கூட்டணிக் கட்சிகளுடனான முக்கிய ஆலோசனைக் கூட்டம் நடைபெற உள்ளது.

இந்தக் கூட்டத்தில் பங்கேற்குமாறு கூட்டணிக் கட்சித் தலைவர்களை அமைச்சர்கள் என். ஆனந்த் மற்றும் ஆதவ் அர்ஜுனா நேரில் சந்தித்து அழைப்பிதழ் வழங்கி வருகின்றனர்.

அந்த வகையில், இன்று அமைச்சர்கள் என். ஆனந்த் மற்றும் ஆதவ் அர்ஜுனா இடதுசாரி கட்சித் தலைவர்களையும் நேரில் சந்தித்து ஆலோசனைக்கூட்டத்தில் பங்கேற்க அழைப்பு விடுத்தனர்.

ஏற்கனவே விடுதலை சிறுத்தைகள் கட்சி (விசிக), மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் (மதிமுக), இந்திய யூனியன் முஸ்லிம் லீக் உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளுக்கு அழைப்பு வழங்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், த.வெ.க. கூட்டணி கட்சிகள் ஆலோசனைக் கூட்டத்தில் தாங்கள் கலந்துகொள்ளப் போவதில்லை என்று இடதுசாரி கட்சிகள் தெரிவித்துள்ளன.

அதேநேரத்தில், கூட்டத்தில் பங்கேற்காவிட்டாலும், முதல்அமைச்சர் விஜய்யை இடதுசாரி கட்சிகளின் தலைவர்கள் சந்திக்க உள்ளதாக கூறப்படுகிறது. மக்கள் தொடர்பான கோரிக்கைகள் குறித்து மு. வீரபாண்டியன் மற்றும் பெ. சண்முகம் ஆகியோர்முதல்அமைச்சர்விஜய்யை நேரில் சந்தித்து மனு அளிக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

# ஆவின் பால் விநியோகக் குறைப்பை கைவிட வேண்டும் மு.வீரபாண்டியன்

சென்னை, ஜூலை 1

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:

சென்னை பெருமாநகர் மற்றும் புறநகர் பகுதிகளில் ஆவின் நிறுவனம் தற்போது தினசரி 14.50 லட்சம் லிட்டர் பாலை பொதுமக்களுக்கு விநியோகம் செய்கிறது. ஆனால் பொதுமக்கள் தேவை 15.50 லட்சம் லிட்டராகும். பல தனியார் நிறுவனங்கள் பால் விற்பனையில் ஈடுபட்டு வந்தாலும் "ஆவின்" பால், தயிர் உள்ளிட்ட பொருட்களையே பொதுமக்கள் விரும்பி வாங்கி வருகின்றனர். குறிப்பாக ஆவின் "கிரீன் மேஜிக்" பால் ஒரு லிட்டர் ரூ.44க்கும் அரை லிட்டர் ரூ.22க்கும் விற்பனை செய்வதால் பொது மக்கள் பெரிதும் விரும்பி வாங்கி வருகின்றனர்.

இந்த நிலையில் பொது மக்களுக்கு ஆவின் நிறுவனம் விநியோகித்து வரும் அனைத்து வகையான பால் அளவில் மொத்தம் சுமார் ஏழு விழுக்காடு வரை வெட்டிக் குறைத்துவிட்டது. அதிலும், குறிப்பாக மக்கள் விரும்பி வாங்கும் கிரீன் மேஜிக் பால் வகையில் 30 விழுக்காடு வரை குறைத்து, நுகர்வுச் சந்தையை தனியார் நிறுவனங்களிடம் தள்ளி விட்டு வருகிறது.

இதன் காரணமாக பொது மக்கள் கடுமையான பாதிப்புக்கு ஆளாகியுள்ளனர். இதன் விளைவாக ஆவின்



நிறுவனத்தின் விற்பனை சந்தை வட்டம் சுருங்கி விடும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. பால் விநியோக சங்கிலியின் இணைப்பாக விளங்கிவரும்முகவர்களை இழக்கும் நெருக்கடியும் உருவாகியுள்ளது.

பால் கொள்முதல் முனையில் குறைவு ஏற்படும் காலங்களில் ஆவின் நிறுவனம் மாற்று ஏற்பாடுகள் செய்து, தனது சந்தை வாய்ப்பை உறுதி செய்து, விரிவுபடுத்துவதில் கவனம் செலுத்தி வந்தது. ஆனால், தற்போது, ஆவின் பால் நுகர்வோர் கிரீன் மேஜிக் பால் உட்பட தேவையான பால் கிடைக்காமல் அவதிப்பட்டு வருகின்றனர். நிலைமை மேலும் மோசமடையும் முன்பு, தமிழ்நாடு அரசு நேரடியாக தலையிட்டு, சென்னை பெருநகர் மற்றும் புறநகர் பகுதி மக்களின் பால் தேவைகளை பூர்த்தி செய்வதில் "ஆவின்" நிறுவனம் முழுமையாக கவனம் செலுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்நாடு அரசையும், பால் வளத்துறை அமைச்சரையும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு கேட்டுக் கொள்கிறது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# திருச்செந்தூரில் திடீரென 100 அடி உள்வாங்கிய கடல்

திருச்செந்தூர், ஜூலை 1

திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கும், அய்யா வைகுண்டர் அவதார பதிக்கும் இடைப்பட்ட கடல் பகுதியில் ஒவ்வொரு மாதமும் வழக்கமாக அமாவாசை மற்றும் பவுர்ணமி நாட்கள்,அதற்குமுன்தினம், மறுநாள் கடல்நீர் உள்வாங்குவது வழக்கமான நிகழ்வாக நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், பவுர்ணமியையொட்டி, திருச்செந்தூரில் கடல் நீர் திடீரென உள்வாங்கி காணப்பட்டது. சுமார் 100 அடி



தூரம் கடல் உள்வாங்கியதால் பாசி படர்ந்த பாறைகள் வெளியே தெரிந்தன. எனினும்,

ஆபத்தை உணராமல் பாறைகள் மேல் நின்று பக்தர்கள் செல்பி எடுத்தனர். கடல் உள்வாங்கிய பகுதிகளில் காவல்துறையினர் மற்றும் கோவில் கடற்கரை பாதுகாப்பு பணியினர் அவர்களுக்கு எச்சரிக்கை விடுத்தனர்.

# ரேசன் அரிசியை நலத்திட்ட உதவியாக விநியோகித்த தவெக எம்.எல்.ஏ. மீது நடவடிக்கை தேவை: நயினார் நாகேந்திரன்

சென்னை, ஜூலை 1

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் எக்ஸ் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

மதுரையில் முதல்வர் விஜய்யின் பிறந்தநாளை ஒட்டி, ஏழை மக்களுக்கான ரேசன் அரிசியை முறைகேடாக நலத்திட்ட உதவியாக வழங்கியதாக மதுரை மேற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் S.R. தங்கப்பாண்டி மீது எழுந்துள்ள புகார் அதிர்ச்சியளிக்கிறது. அரசு வழங்கும் இலவச அரிசியை தங்களின் சொந்த உதவி போலக் காட்டி விளம்பரப்படுத்துவது வெட்கக்கேடான செயலாகும்.

விநியோகிக்கப்பட்ட பைகளில் துர்நாற்றம் வீசிய தரமற்ற ரேசன் அரிசி இருந்ததால், அதிருப்தியடைந்த பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முறையிட்டுள்ளனர். இந்தப் புகாரின் அடிப்படையில், மதுரை மாவட்ட வருவாய் அலுவலர் அரிசியைப் பறிமுதல் செய்து ஆய்வகச் சோதனைக்கு அனுப்பி வைத்துள்ளார்.



எனவே, புகாரின் உண்மைத்தன்மையை ஆராய்ந்து, உரிய விசாரணை நடத்தி, புகார் உண்மையாக இருக்கும் பட்சத்தில், இத்தகைய விதிமீறலில் ஈடுபட்ட தவெகவினர் மீதும், அதற்கு உடந்தையாக இருந்தவர்கள் மீதும் காவல் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# 'தவெக ஆட்சி கவிழ வாய்ப்பு இல்லை.. 5 ஆண்டுகள் தொடரும்' திருமாவளவன் பேட்டி



மதுரை, ஜூலை 1

5 ஆண்டுகளுக்கு எவ்விந்த இடையூறு இல்லாமலும் தவெக ஆட்சி தொடரும் என திருமாவளவன் கூறினார்.

விசிக தலைவர் திருமாவளவன் மதுரையில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது செய்தியாளர்கள் எழுப்பிய பல்வேறு கேள்விகளுக்கு பதிலளித்து பேசினார். அவர் பேசிய விவரம் பின்வருமாறு; ★ எங்களை பொறுத்தவரை தவெக ஆட்சி கவிழ வாய்ப்பு இல்லை. 5 ஆண்டுகளுக்கு எவ்வித இடையூறு இல்லாமலும் தவெக ஆட்சி தொடரும். தவெக ஆட்சி தொடர விசிக துணை நிற்கும். தவெகவுக்கு அளித்த வாக்குறுதியை கட்டாயம் காப்பாற்றுவோம். தவெக ஆட்சிக்கு கொடுத்த ஆதரவு எப்போதும் தவறாது. ★ நாளை தவெக நடத்தும் கூட்டணி கட்சி கூட்டத்தில் பங்கேற்போம். கட்சி தலைவர்கள், எம்.எல்.ஏ.க்கள் கூட்டத்தில் பங்கேற்பார்கள். விசிக எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள் தவெக கூட்டத்தில் பங்கேற்கிறார்கள். ★ அதிமுகவில் தொடர் பதவி விலகல், அக்கட்சியில் நிகழும் உட்கட்சி முரணை வெளிச்சத்துக்கு கொண்டு வந்துள்ளது. இது அதிமுகவில் தற்போது பெரிய பிரச்சினையாக உள்ளது. அதிமுகவில் என்ன பிரச்சினை என்பதை பதவி விலகுவோரிடம்தான் கேட்க வேண்டும். அவர்கள்தான் நாட்டு மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்." இவ்வாறு அவர் கூறினார்.

# வகுப்பறையில் மாணவிக்கு பாலியல் தொல்லை: அரசு பள்ளி ஆசிரியருக்கு சாகும்வரை சிறை

நெல்லை, ஜூலை 1

நெல்லை மாவட்டம் வீரவநல்லூர் பகுதியை சேர்ந்தவர் சிதம்பரம் என்ற நடேசன் (வயது 63). இவர், அந்த பகுதியில் உள்ள அரசு பள்ளியில் கைத்தறி மற்றும் நெசவு பிரிவு ஆசிரியராக பணியாற்றி வந்தார். இவர் கடந்த 2022ம் ஆண்டு 9 வயது மாணவி ஒருவருக்கு வகுப்பறையில் வைத்து பாலியல் தொல்லை கொடுத்தார். இதுகுறித்து அந்த மாணவி தனது பெற்றோரிடம் தெரிவித்தார். இதனால் அதிர்ச்சி அடைந்த பெற்றோர் சேரன்மாதேவி அனைத்து மகளிர் போலீஸ் நிலையத்தில் புகார் செய்தனர். அதன் பேரில் போலீசார் போக்சோ சட்டத்தில் வழக்குப்பதிவு செய்து, சிதம்பரத்தை கைது செய்தனர். இந்த வழக்கு விசாரணை நெல்லை மாவட்ட சிறப்பு போக்சோ கோர்ட்டில் நடந்து வந்தது.நேற்றுஇந்தவழக்கைவிசாரித்தநீதிபதிசுரேஷ்குமார், குற்றம் சாட்டப்பட்ட சிதம்பரத்துக்கு சாகும்வரை சிறை தண்டனை வழங்கி தீர்ப்பு கூறினார். மேலும் ரூ.20 ஆயிரம் அபராதமும் விதித்தார். பாதிக்கப்பட்ட சிறுமிக்கு அரசு சார்பில் ரூ.5 லட்சம் நிவாரணம் வழங்கவும் உத்தரவிட்டார்.

# சி.விஜயபாஸ்கர், எம்.ஆர்.விஜயபாஸ்கர் இருவரும் 2ந்தேதி தவெகவில் இணையவுள்ளதாக தகவல்

சென்னை, ஜூலை 1

அதிமுகவை சேர்ந்த எம்.எல்.ஏ.க்கள் அடுத்தடுத்து தங்களது பதவியை ராஜினாமா செய்துவிட்டு தவெகவில் இணைவது எடப்பாடி பழனிசாமி மட்டுமல்லாது கட்சி தொண்டர்களையும் அதிர்ச்சியடைய செய்துள்ளது.

அதிமுக அதிருப்தி அணி

நடந்து முடிந்த சட்டசபை தேர்தலில் தவெக, திமுகவுக்குஅடுத்து3வதுஇடத்தைஅதிமுகபிடித்ததால், அக்கட்சியில் பலர் அதிருப்தி அடைந்தனர். குறிப்பாக எஸ்.பி. வேலுமணி, சி.வி.சண்முகம் மற்றும் சி.விஜயபாஸ்கர் தலைமையில் அதிமுக உறுப்பினர்கள் பிரிந்து எடப்பாடி பழனிசாமிக்கு எதிரான அணியை உருவாக்கினர். தங்கள் ராஜினாமா கடிதத்தையும் வழங்கினர்.

இதன் பிறகு நடந்த சமாதான பேச்சுக்கு பிறகு எஸ்.பி. வேலுமணி தலைமையில் சில உறுப்பினர்கள் மீண்டும் எடப்பாடி பழனிசாமி தரப்புக்கு ஆதரவாகத் திரும்பினர். எனினும் சி.வி. சண்முகம் மற்றும் சி.விஜயபாஸ்கர் எடப்பாடி பழனிசாமியை சந்திப்பதை தவிர்த்து வந்தனர்.

இதற்கிடையே, அதிமுக அதிருப்தி அணியில் இருந்த மரகதம் குமரவேல், ஜெயக்குமார், சத்யபாமா மற்றும் இசக்கி சுப்பையா ஆகியோர்தங்களது எம்.எல்.ஏ. பதவிகளை ராஜினாமா செய்து தவெகவில் இணைந்தனர்.

இதனைதொடர்ந்து, அதிமுக எம்.எல்.ஏ.க்களானசி.விஜயபாஸ்கர் மற்றும் எம்.ஆர்.விஜயபாஸ்கர் இருவரும் தங்களது பதவியை ராஜினாமா செய்துள்ளனர். சி.விஜயபாஸ்கர் தனது ஆதரவாளர்களுடன் நேற்று தவெகவில் இணைய உள்ளதாக கூறப்பட்டது. ஆனால் நடிகரும், இயக்குநருமாக பாக்கியராஜ் மறைவு உள்ளிட்ட காரணங்களால் இந்த நிகழ்ச்சி ரத்துசெய்யப்பட்டது.



சி.விஜயபாஸ்கர் மற்றும் எம்.ஆர்.விஜயபாஸ்கர்

இந்த நிலையில், தங்களது எம்.எல்.ஏ.பதவியை ராஜினாமா செய்துள்ள சி.விஜயபாஸ்கர் மற்றும் எம்.ஆர்.விஜயபாஸ்கர் இருவரும் நாளை மறுநாள் (2ந்தேதி) தவெகவில் இணைய உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இருவரும் சுமார் 15 ஆயிரத்துக்கும் மேலான தங்களது ஆதரவாளர்களுடன்முதல்அமைச்சர்விஜய்முன்னிலையில் தவெகவில் இணைய உள்ளதாக கூறப்படுகிறது.

இதற்காக மாமல்லபுரம் அருகே உள்ள தனியார் விடுதியில் பிரமாண்ட நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

முன்னாள் அமைச்சர்களான எம்.எஸ்.எம். ஆனந்தன், மற்றும் திருச்சியை சேர்ந்த வளர்மதி ஆகியோரும் தவெகவில் இணைய உள்ளதாக கூறப்படுகிறது.

# ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கு: சிபிஐ விசாரணைக்கு மாற்ற வேண்டும் - நீலம் பண்பாட்டு மையம் வலியுறுத்தல்

சென்னை, ஜூலை 1

பகுஜன் சமாஜ் கட்சியின் முன்னாள் மாநிலத்தலைவர் ஆம்ஸ்ட்ராங் கொலை வழக்கு: அரசு மேல்முறையீட்டைத் திரும்பப் பெற்று, இவ்வழக்கை சிபிஐ (CBI) விசாரணைக்கு மாற்ற வேண்டும் என்று நீலம் பண்பாட்டு மையம் வலியுறுத்து அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது,



அந்த அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது,

பகுஜன் சமாஜ் கட்சியின் முன்னாள் மாநிலத் தலைவர் ஆம்ஸ்ட்ராங் படுகொலை வழக்கு: மேல்முறையீட்டை வாபஸ் பெற்று சிபிஐ விசாரணைக்கு தவெக அரசு ஒப்படைக்க வேண்டுமென நீலம் பண்பாட்டு மையம் வலியுறுத்துகிறது! பகுஜன் சமாஜ் கட்சியின் முன்னாள் மாநிலத்தலைவர் அண்ணன் ஆம்ஸ்ட்ராங் அவர்களின் அரசியல் படுகொலையில் தொடர்புடைய முக்கிய குற்றவாளிகளை தமிழக காவல்துறை இதுவரை கைது செய்யவில்லை. மாறாக, கைது செய்யப்பட்ட சில குற்றவாளிகள் காவல்துறையால் என்கவுண்டரில் சுட்டுக் கொல்லப்பட்டனர்: பலர் தற்போது பிணையில் வெளிவந்துள்ளனர். படுகொலை செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகியும். இதுவரை முழுமையான மற்றும் நியாயமான விசாரணை மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வாறான நிலை உருவாகும் என்பதை முன்கூட்டியே உணர்ந்த பகுஜன் சமாஜ் கட்சியின் தேசியத் தலைவரும். உத்தரப் பிரதேசத்தின் முன்னாள் முதலமைச்சருமான செல்வி. மாயாவதி அவர்கள். அண்ணன் ஆம்ஸ்ட்ராங் அவர்களுக்கு அஞ்சலி செலுத்த சென்னை வந்தபோதே. இந்த வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார். அதே போல், அண்ணன் ஆம்ஸ்ட்ராங் அவர்களின் மனைவி திருமதி. பொற்கொடி ஆம்ஸ்ட்ராங் அவர்களும் தொடக்கத்திலிருந்தே சிபிஐ விசாரணை கோரி வலியுறுத்தியதுடன். வழக்கை சிபிஐக்கு மாற்றக் கோரி சென்னை உயர்நீதிமன்றத்திலும் மனுத் தாக்கல் செய்தார்.

இதனைத் தொடர்ந்து, சென்னை உயர்நீதிமன்றம் இந்த வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்ற உத்தரவிட்டது. ஆனால், திமுக தலைமையிலான அப்போதைய தமிழக அரசு அந்த உத்தரவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து, சிபிஐ விசாரணைக்கு மாற்றும் உத்தரவுக்கு இடைக்காலத் தடையுத்தரவைப் பெற்றது.

இந்நிலையில், புதிதாக ஆட்சி அமைத்திருக்கும் தவெக தலைமையிலான தமிழக அரசின் தற்போதைய நிலைப்பாட்டை அடுத்த மாதம் (ஜூலை) நடைபெறவுள்ள விசாரணையின்போது தெளிவுபடுத்துமாறு உச்சநீதிமன்றம் கேட்டுள்ளது.இந்நேரத்தில்.தமிழகஅரசுதனதுமேல்முறையீட்டு மனுவை வாபஸ் பெற்று, இந்த வழக்கை தாமாக முன்வந்து சிபிஐ விசாரணைக்கு ஒப்படைப்பதே நீதிக்கும். சட்டத்தின் மீதான மக்களின் நம்பிக்கைக்கும் உரிய நடவடிக்கையாக இருக்கும். எனவே. அண்ணன் ஆம்ஸ்ட்ராங் அவர்களின் படுகொலைக்கு நீதி கிடைக்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழக அரசை நீலம் பண்பாட்டு மையம் வலியுறுத்துகிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அமோனியா வாயு கசிவு எதிரொலி: 68 அசாம் மாநில தொழிலாளர்கள் சொந்த ஊருக்கு அனுப்பிவைப்பு

திருவள்ளூர், ஜூலை 1

திருவள்ளூர் மாவட்டம் கன்னிகைப்பேர் கிராமத்தில் 'புனித பீட்டர் பால்' என்கிற கடல் உணவு பொருள்களை பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் தொழிற்சாலை செயல்பட்டு வந்தது. இங்கு கடந்த 21ந்தேதி அமோனியா வாயு கசிவு ஏற்பட்டு வடமாநில தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டனர். இதில் பாதிக்கப்பட்ட 16 பெண் தொழிலாளர்கள் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர்.

இதற்கிடையே தொழிற்சாலையில் பணியாற்றிய 146 வடமாநில தொழிலாளர்கள் பெரியபாளையத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டிருந்தனர்.





முதற்கட்டமாக கடந்த 26ந்தேதி அங்கு தங்கியிருந்த ஒடிசா மாநிலத்தை சேர்ந்த 59 பேர் அவர்களது விருப்பத்தின் பேரில் சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இந்த நிலையில், நேற்று அசாம் மாநிலத்தை சேர்ந்த 44 ஆண்கள் மற்றும் 24 பெண்கள் என மொத்தம் 68 தொழிலாளர்கள் அவர்களது விருப்பத்தின் பேரில் சொந்தஊர்களுக்குஅனுப்பி வைக்கப்பட்டனர். திருவள்ளூர் வருவாய் ஆர்.டி.ஓ. ரவிச்சந்திரன் தலைமையிலான அதிகாரிகள், தொழிலாளர்களை சென்னை சென்டிரல் ரெயில் நிலையத்திற்கு அழைத்து சென்று, அங்கிருந்து அசாம் மாநிலம் செல்லும் ரெயிலில் அனுப்பி வைத்தனர்.

மேலும் பெரியபாளையத்தில் தங்கியுள்ள ஜார்கண்ட் மாநிலத்தை சேர்ந்த மீதமுள்ள தொழிலாளர்களையும் அவர்களது சொந்த மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கும் நடவடிக்கையை மாவட்ட நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது.

# "உறங்கும்போது சார்ஜ் போட வேண்டாம்": மின் ஆய்வுத்துறை அதிகாரி அறிவுறுத்தல்

ஈரோடு, ஜூலை 1

தமிழ்நாடு மின் ஆய்வுத்துறையின் ஈரோடு மின் ஆய்வாளர் உசேன்பாஷா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது:

தேசிய மின்சார பாதுகாப்பு தினம் ஜூன் 26ந் தேதி கடைபிடிக்கப்பட்டு வருகிறது. இதையொட்டி ஜூன் 26ந் தேதி முதல் ஜூலை 2ந் தேதி வரை தேசிய மின்சார பாதுகாப்பு வாரம் கடைபிடிக்கப்படுகிறது. இந்த நிகழ்வையொட்டி பொது மக்கள் மின்சார பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்ற கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அதன்படி, மின்சார பிளக் சாக்கெட்டுகளில் விரல்கள் அல்லது வேறு எந்த மின் கடத்தும் பொருட்களையும் நுழைக்கக்கூடாது. மின் சாதனங்களில் இருந்து தண்ணீரை விலக்கி வைக்க வேண்டும். ஒரு பிளக்கை அகற்றும்போதும், சொருகும்போதும் மின்சாரத்தை துண்டித்த பிறகே செய்ய வேண்டும். அறுந்த மின்கம்பிகளை தொடக்கூடாது.

பொதுமக்கள் உறங்கும் போது உங்கள் மின் சாதனங்களுக்கு சார்ஜ் போட வேண்டாம். போலியான சார்ஜர்கள் வாங்கவோ, பயன்படுத்தவோ வேண்டாம். ஈரத்துணிகளால் மின் சாதனங்களை துடைக்கக்கூடாது. பழைய பழுதடைந்த மின்ஒயர், கம்பிகளை பயன்படுத்தி மின் இணைப்பு கொடுக்கக்கூடாது. மின் சாதனங்கள் இணைக்கும் பிளக் சாக்கெட்டு இணைப்புகளில் "எர்த்" இணைப்பு அவசியம் செய்ய வேண்டும். குழந்தைகளின் கையில் எட்டும் வகையில் மின் சாதனங்கள் பொருத்தவோ,வைக்கவோ கூடாது. இவ்வாறு அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# பெற்றோர் வேறு பள்ளியில் சேர்த்ததால் விரக்தி: பிளஸ்1 மாணவி எடுத்த விபரீத முடிவு

சேலம், ஜூலை 1

சேலம் மாவட்டம் மேச்சேரி அருகே இருசாக்கவுண்டனூர் பகுதியை சேர்ந்தவர் சந்திரசேகர். இவருக்கு 2 மகள்கள், ஒரு மகன் உள்ளனர். இதில் மூத்த மகள் காவியா (15 வயது) மேச்சேரியில் உள்ள அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளியில் 10ம் வகுப்பு படித்து முடித்து உள்ளார். இவர் தேர்வில் குறைவான மதிப்பெண்கள் எடுத்துள்ளார்.

இதனால் மாணவியின் பெற்றோர் அருகில் உள்ள குள்ளமுடையானூர் அரசு பள்ளியில் காவியாவை 11ம் வகுப்பில் சேர்த்துள்ளனர். இந்த நிலையில் மாணவி காவியா சக தோழிகள் படிக்கும் பள்ளியில் சேர்க்காமல் வேறு பள்ளியில் சேர்த்ததால் விரக்தியில் மனமுடைந்து சோர்வாக இருந்துள்ளார்.

இதனிடையே கடந்த 24ந்தேதி வீட்டில் யாரும் இல்லாதபோது காவியா விஷம் குடித்து மயங்கி கிடந்தார். இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த குடும்பத்தினர் உடனடியாக அவரை மீட்டு சிகிச்சைக்காக ஓமலூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்று, மேல் சிகிச்சைக்காக கிருஷ்ணகிரியில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

ஆனால் அங்கு சிகிச்சை பெற்று வந்த மாணவி சிகிச்சை பலனின்றி நேற்று இறந்தார். இந்த சம்பவம் குறித்து மேச்சேரி போலீசார் வழக்குப்பதிவு விசாரணை நடத்தி வருகின்றனர்.

# சேகர்பாபு, மேயர் பிரியா உள்பட 200க்கும் மேற்பட்டோர் மீது வழக்கு





சென்னை, ஜூலை 1

தமிழக மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் சரத்குமாரை பதவி நீக்கம் செய்யக்கோரி தி.மு.க. மாணவர் அணி சார்பில் தமிழ்நாடு முழுவதும் மாவட்ட தலைநகரங்களில் நேற்று போராட்டம் நடந்தது.

சென்னை எழும்பூர் ராஜரத்தினம் மைதானம் அருகில் போராட்டத்திற்கான மேடைகள் அமைக்கும் பணியில் தி.மு.க.வினர் நேற்று ஈடுபட்டனர்.

ஆனால் போலீசார் போராட்டத்திற்கு அனுமதி அளிக்கவில்லை. எனவே, மேடை அமைக் கக்கூடாது என கூறினார்கள். தொடர்ந்து அனுமதியின்றி மேடை அமைக்க முயன்றவர்களை போலீசார் கைது செய்ய முயன்றனர். அப்போது, போலீசாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே கடும் வாக்குவாதம் ஏற்பட்டு, தள்ளுமுள்ளாக மாறியது. இதற்கிடையே அங்கு வந்த முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் உள்ளிட்ட நிர்வாகிகள் தடையை மீறி போராட்டத்தில் ஈடுபட்டனர். அப்போது, தமிழக அரசுக்கு எதிராக கண்டன கோஷங்களை எழுப்பினார்கள். சிறிது நேரத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட மா.சுப்பிரமணியன், முன்னாள் எம்.எல்.ஏக்கள் உள்ளிட்ட அனைவரையும் கைது செய்து அழைத்து சென்றனர்.

இதற்கிடையே, சென்னை ராஜரத்தினம் மைதானம் அருகில் போராட்டம் நடத்த அனுமதி மறுத்ததாலும், போராட்டம் நடத்த வந்தவர்களை கைது செய்ததாலும் தி.மு.க. மாணவர் அணியினர் புரசைவாக்கம் டவுட்டன் பாலம் அருகே திடீரென சாலை மறியலில் ஈடுபட்டனர். இதில் முன்னாள் அமைச்சர் சேகர்பாபு, மேயர் பிரியா மற்றும் முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அமைச்சருக்கு எதிராக கையில் பதாகை ஏந்தி, சாலை நடுவில் அமர்ந்து கோஷங்களை எழுப்பினார்கள். இதனால் புரசைவாக்கம் நெடுஞ்சாலையில் கடும் போக்குவரத்து நிலவியது. இதனைத்தொடர்ந்து, போராட்டக்காரர்களை போலீசார் கைது செய்ய முயன்றனர்.

தி.மு.க.வினர் போலீஸ் வாகனத்தின் முன்பு சாலையில் படுத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். கடும் தள்ளு முள்ளுக்கு இடையே அவர்களை போலீசார் குண்டுக்கட்டாக தூக்கி கைது செய்தனர். சென்னையில் அனுமதியின்றி போராட்டத்தில் ஈடுபட்ட முன்னாள் அமைச்சர்கள் மற்றும் 200 பெண்கள் உள்ளிட்ட 700 பேர் கைது செய்யப்பட்டனர்.

# வீட்டில் தூங்கிய சிறுமியை தூக்கிச்சென்று கிணற்றில் வீசிக்கொன்ற கொடூர அத்தை: திடுக்கிடும் தகவல்கள்

மதுரை, ஜூலை 1

மதுரை பைகாரா பகுதியில் முத்துராமலிங்கபுரம் 2வது தெருவை சேர்ந்தவர் பாலகணேஷ் (வயது 32). கூலித்தொழிலாளி. இவருடைய மனைவி கார்த்திகை செல்வி (28). இவர்களுக்கு சாய் தீப்தி, சாரு நித்திகா (5) என்ற இரட்டை பெண் குழந்தைகள். சம்பவத்தன்று கார்த்திகைசெல்வி தனது மகள்களுடன் ராமநாதபுரம் எம்.எஸ்.கே.நகர் பகுதியில் உள்ள தந்தை முத்துமுருகன் வீட்டுக்கு சென்றார்.

நள்ளிரவில், வீட்டில் தூங்கிக்கொண்டிருந்த சிறுமி சாய் தீப்தி திடீரென மாயமானாள். இதனால் அதிர்ச்சி அடைந்த குடும்பத்தினர் பல்வேறு இடங்களில் தேடினர். அப்போது, பால்பாண்டி என்பவரது வீட்டின் பின்புறம் உள்ள உறை கிணற்றில் சிறுமி சாய் தீப்தி பிணமாக மிதந்தாள். இதைப்பார்த்ததும் தாய் கார்த்திகை செல்வி கதறி அழுதார்.

சம்பவ இடத்துக்கு வந்த போலீசார், சிறுமியின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேலும் இதுதொடர்பாக ராமநாதபுரம் நகர் போலீஸ் இன்ஸ்பெக்டர் தெய்வீக பாண்டியன் தலைமையிலான போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தினர். அப்போது, உறை கிணற்றில் வீசி சிறுமி கொலை செய்யப்பட்டது உறுதியானது.

வீட்டில் உள்ளவர்களுக்கு தெரியாமல் இச்சம்பவம் நடந்து இருக்காது என்று கருதிய போலீசார், அதுபற்றி தீவிரமாக விசாரித்தனர். அதன்பேரில் கார்த்திகை செல்வியின் தம்பி அஜித்குமாரின் மனைவி சபரிகாவிடம் (22) விசாரணை நடத்தினர். அப்போது அவர் முன்னுக்குப்பின் முரணாக பதில் கூறி உள்ளார். துருவி துருவி விசாரித்ததில் சபரிகாதான் இந்த கொலையை செய்தது தெரியவந்தது.





சிறுமி சாய் தீப்தியின் தாய் மாமாவின் மனைவியான சபரிகா இந்த கொடூர சம்பவத்தை செய்தது ஏன்? என்பது பற்றி போலீசிடம் அவர் கூறிய தகவல்கள் வருமாறு:

நான், கல்லூரியில் படித்தபோது உறவினர் மகனான அஜித்குமாரை காதலித்தேன். இந்த காதலை அஜித்குமார் வீட்டினர் ஏற்கவில்லை. இதனால் அஜித்குமார், என்னை அழைத்துச் சென்று திருமணம் செய்து கொண்டார். அஜித்குமாருக்கு வசதியான இடத்தில் பெண் பார்த்து திருமணம் செய்ய வேண்டும் என்று அவருடைய தாய்பூமாதேவிதிட்டமிட்டு இருந்த நிலையில் இந்த காதல் திருமணம் பூமாதேவிக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தியது.

இதனால் என் மீது பூமாதேவி, அவருடைய மகள் கார்த்திகைசெல்வி உள்ளிட்டோர் பாசம் இல்லாமல் இருந்தார்கள். இந்தநிலையில் எனக்கு கடந்த 11 மாதங்களுக்கு முன்பு பெண் குழந்தை பிறந்தது. அந்த குழந்தை மாற்றுத்திறனாளியாக பிறந்ததால் குடும்பத்தினரிடம் அந்த குழந்தை மீதும் வெறுப்பு அதிகரித்தது. மேலும் கார்த்திகைசெல்வி ஊருக்கு வந்த போதெல்லாம் வீட்டில் பிரச்சினை அதிகரித்து வந்தது. எனவே கார்த்திகை செல்வியின் மீதும், அவரின் குழந்தைகள் மீதும் எனக்கு கோபம் ஏற்பட்டது.

கார்த்திகை செல்வியின் 2 குழந்தைகளும் அழகாக இருப்பதால்தானே என் குழந்தையை கவனிக்காமல் உள்ளனர் என்றும், வெறுப்பை காட்டுகின்றனர் என்றும் நாளுக்கு நாள் ஆத்திரம் அடைந்தேன். இந்நிலையில் கார்த்திகை செல்வி தனது குழந்தைகளுக்கு காதணி விழா வைப்பதற்கு முடிவு செய்தார். இதற்கு எனது சில நகைகளை தாய்மாமன் சீராக செய்ய வேண்டும் என்று பூமாதேவி கூறினார். நகைகளை கொடுக்க எனது மனம் இடம் கொடுக்கவில்லை.

இந்நிலையில் 2 நாட்களுக்கு முன்பு கார்த்திகை செல்வி குழந்தைகளுடன் வந்திருந்தார். மாமனார்மாமியார் உள்ளிட்டோர் அவரது குழந்தைகளை நன்றாக கவனித்தனர். எனவே அந்த குழந்தைகளை கொல்ல திட்டமிட்டேன். இதற்காக நேரம் பார்த்து காத்திருந்தபோது வீட்டில் அனைவரும் சாப்பிட்டுவிட்டு சிறிது நேரம் பேசிவிட்டு தூங்கச் சென்றனர். எல்லோரும் அசந்து தூங்கிய நேரத்தில் நைசாக சாய் தீப்தியை தூக்கிக்கொண்டு வெளியே சென்றேன்.

குழந்தையுடன் ரெயில்வே தண்டவாளம் பகுதியை நோக்கி சென்றேன். நடந்து செல்லும்போது சாய் தீப்தி கண்விழித்து, 'அத்தை எங்கே செல்கிறோம்' என்று கேட்டாள். அதற்கு சபரிகா, 'ஒன்றுமில்லை தூங்கு' என்று தட்டி கொடுத்தேன். என் தோளிலேயே தூங்கினாள். தண்டவாளத்தின் அருகே சபரிகா சென்றபோது அந்த பகுதியில் நாய்கள் குரைத்தன.

உடனே நான் மீண்டும் வீட்டை நோக்கி சிறுமியுடன்வந்து கொண்டு இருந்தேன். சிறுமைய மீண்டும் வீட்டுக்குள் கொண்டு சென்றால் சந்தேகம் வந்து விடும் என நினைத்தேன். எனவே அருகில் உள்ள வீட்டின் பின்புறம் சென்று அங்கிருக்கும் உறை கிணற்றுக்குள் கண்ணிமைக்கும் நேரத்தில் சாய் தீப்தியை தூக்கி வீசினேன். அவள் கிணற்றில் உயிருக்கு போராடினாள். ஆனால், நான் வீட்டிற்கு சென்று விட்டேன். எப்படியும் இந்த கொலையில் போலீசார் அக்கம்பக்கத்தினர் மற்றும் மற்றவர்களை மட்டுமே சந்தேகிப்பார்கள் என்று கருதினேன். இவ்வாறு சபரிகா கூறியதாக போலீசார் தெரிவித்தனர்.

இதனையடுத்து அவர் கைது செய்யப்பட்டு, கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். சிறுமி சாய் தீப்தியின் உடல் பிரேத பரிசோதனைக்கு பின்னர் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டு மதுரைக்கு கொண்டு வரப்பட்டது. இச்சம்பவம் ராமநாதபுரத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# ஏறிய வேகத்தில் இறங்கிய மல்லிகைப்பூ விலை.. விவசாயிகள் கவலை



திருமங்கலம், ஜூலை 1

திருமங்கலத்தில் பூ மார்க்கெட் செயல்பட்டு வருகிறது. திருமங்கலம், கள்ளிக்குடி தாலுகா பகுதிகளில் இருந்து சின்ன உலகாணி, மைக்குடி கூடக்கோவில், உள்பட 50க்கும் மேற்பட்ட கிராமங்களில் விவசாயிகள் மல்லிகைப்பூ சாகுபடி செய்துள்ளனர். பெரும்பாலான விவசாயிகள் தங்களுடைய வாழ்வாதாரமாக பூ சாகுபடி செய்து விற்பனை செய்து வருகின்றனர். திருமங்கலம் பூ மார்க்கெட்டில் விவசாயிகள் தங்கள் விளைவித்த பூக்களை விற்பனைக்காக கொண்டு வருகின்றனர். இம்மாதம் முழுவதும் மல்லிகைப்பூவின் விலை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளது. நறுமண தொழிற்சாலைக்கு கிலோ ரூ.200க்கு அனுப்பும் அவல நிலை உள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

பொதுமக்களுக்கு மல்லிகைப்பூ கிலோ ரூ.300க்கு விற்பனை செய்யப்படுகிறது. தற்போது ஆனி மாதம் என்பதால் கோவில் திருவிழாக்கள் மற்றும் திருமணம் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் கூட நடைபெறாததால் பூக்கள் மலைபோல் குவிக்க ப்பட்டு விற்பனையாகாமல் உள்ளதாக வியாபாரிகள், விவசாயிகள் தெரிவித்தனர். மேலும் பூக்கள் பறிக்கும் கூலி கூட கிடைப்பதில்லை என விவசாயிகள் வேதனை தெரிவித்தனர்.

மற்ற பூக்களான ரோஜாப்பூ. கனகாம்பரம், பட்டு ரோஸ், செவ்வந்தி உள்ளிட்ட பூக்களின் வரத்து குறைவானாலும், அதனுடைய விளையும் கடும் வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால் விவசாயிகளும், வியாபாரிகளும் கவலை அடைந்துள்ளனர்.

# கலெக்டர் அலுவலகத்தில் வேலை கேட்டு கதறி அழுத பஸ் கண்டக்டர்... நெல்லையில் பரபரப்பு

நெல்லை, ஜூலை 1

நெல்லை மாவட்ட மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலகத்தில் நேற்று நடந்தது. மாவட்ட வருவாய் அலுவலர்துரைதலைமை தாங்கி பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை வாங்கினார்.

இந்த நிலையில், நெல்லை கருப்பனூத்து வடக்கு அச்சம்பட்டி பகுதியைச் சேர்ந்தவர் ஸ்ரீதம்பி துரை. இவர் அரசு போக்குவரத்து கழகத்தில் பஸ் கண்டக்டராக தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் வேலை பார்த்து வந்தார். இந்த நிலையில் அவரை பணியிலிருந்து கடந்த மே மாதம் நிறுத்திவிட்டதாக கூறப்படுகிறது.



இதனால் மனமுடைந்த ஸ்ரீதம்பிதுரை நேற்று கலெக்டர் அலுவலகத்துக்கு வந்து, தனக்கு மீண்டும் ஒப்பந்த அடிப்படையில் பணி வழங்க வேண்டும் என்று கூறி கதறி அழுதார். அங்கு நின்ற போலீசார் அவரை அழைத்து சென்று மாவட்ட வருவாய் அலுவலரிடம் மனு கொடுக்க செய்தனர்.

இதுகுறித்து கண்டக்டர் ஸ்ரீதம்பிதுரை கூறுகையில், "25 வருசமா பஸ் ஓட்டுறேன். எனக்கு 2 பெண் குழந்தைகள் இருக்கு. ஏ.எம். (அதிகாரி) குமார் என்பவர் நான் நீண்ட நாட்களாக வேலையில் இருப்பதாக கூறி பணியில் இருந்து என்னை இறக்கிவிடுகிறார். வேலை இல்லாததால் எனது குடும்பம் மிகவும் கஷ்டப்படுகிறது.

ஜூன் 19ம் தேதி எந்த காரணமும் இன்றி தன்னை பணியில் இருந்து நீக்கினர். தற்காலிக நடத்துநர் பணியை மீண்டும் கேட்டதற்கு பஞ்சாயத்து அலுவலகத்தில் தூய்மை பணி வாங்கி தருவதாக அதிகாரி குமார் கூறிகிறார்.

நெல்லை அரசு போக்குவரத்து கழகத்தில் ஜாதிய பாகுபாடு உள்ளது. குமார் என்பவரை தவிர்த்து அனைத்து ஊழியர்களும் எனக்கு ஆதரவாக உள்ளனர். வேலை கேட்டு அனைத்து அதிகாரிகளிடமும் மனு கொடுத்துள்ளேன். இவ்வாறு அவர் கூறினார். இதுதொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வேகமாக பரவி வருகிறது.

# கேளம்பாக்கம் அருகே கிணற்றில் கண்டெடுக்கப்பட்ட ராக்கெட் லாஞ்சர்: வெடித்து செயலிழக்க வைத்த ராணுவத்தினர்



செங்கல்பட்டு, ஜூலை 1

செங்கல்பட்டு மாவட்டம் கேளம்பாக்கம் அடுத்த தையூர் கிராம பழைய மனைபிரிவு ஒன்றில் கடந்த 17ந்தேதி காலை வாலிபர்கள் சிலர் கிரிக்கெட் விளையாடினர். அப்போது அங்குள்ள பாழடைந்த விவசாய கிணற்றில் நாய்க்குட்டி ஒன்று தவறி விழுந்து கிடப்பதை கண்டனர். அந்த வாலிபர்கள், கிணற்றில் இறங்கி நாய்க்குட்டியை மீட்டனர்.

அப்போது கிணற்றில் ராக்கெட் லாஞ்சர் போன்று மர்ம பொருள் ஒன்று இருப்பதை கண்டெடுத்தனர். இதுகுறித்து கேளம்பாக்கம் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. போலீசார் விரைந்து சென்று, ராக்கெட் லாஞ்சரை பாதுகாப்பாக மீட்டு உயர் அதிகாரிகள் உதவியுடன் ராணுவத்துக்கு தகவல் தெரிவித்தனர்.

பின்னர் தமிழ்நாடு கமாண்டோ படையை சேர்ந்தவர்கள் சம்பவ இடத்துக்கு சென்று, ராக்கெட் லாஞ்சர் வெடிகுண்டை, பொக்லைன் எந்திரம் மூலம் பள்ளம் தோண்டி பாதுகாப்பாக பூமியில் புதைத்தனர். மேலும் அப்பகுதிக்கு யாரும் செல்லாதவாறு போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

இந்த நிலையில் 12 நாட்கள் கழித்து நேற்று அந்த ராக்கெட் லாஞ்சர் வெடிகுண்டு செயலிழக்க வைக்கப்பட்டது. அதன்படி ராணுவ உயரதிகாரி உள்ளிட்ட வெடிகுண்டு நிபுணர்கள் 6 பேர் கொண்ட குழு நேற்று பகலில் ராக்கெட் லாஞ்சர் புதைக்கப்பட்ட இடத்துக்கு சென்று உள்ளூர் போலீசாரின் பாதுகாப்புடன் அதே இடத்தில் ராக்கெட் லாஞ்சர் வெடிகுண்டை வெடிக்க வைத்து செயலிழக்க வைத்தனர். அது வெடித்தபோது வானத்தை நோக்கி பல அடி உயரத்துக்கு கரும்புகை மூட்டம் எழுந்தது.

# விழுப்புரம்: 5 நாட்களுக்கு போக்குவரத்து மாற்றம்; காவல்துறை அறிவிப்பு

விழுப்புரம் ஜூலை 1

விழுப்புரம் நகரில் பாதாள சாக்கடை கழிவுநீர் குழாய் பதிக்கும் பணியை முன்னிட்டு, 5 நாட்களுக்கு போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

விழுப்புரம் நகரில் கிழக்கு பாண்டிச்சாலை ரெட்டியார் மில் அருகே நகராட்சி பாதாள சாக்கடை கழிவுநீர் குழாய் பதிக்கும் பணி நடைபெறுகிறது. இதனை முன்னிட்டு 29.06.2026 முதல் 5 நாட்களுக்கு போக்குவரத்தில் தற்காலிக மாற்றம் செய்யப்பட்டுள்ளது. மாற்றம் அமலில் இருக்கும் நேரம்: காலை 8 மணி 10 மணி மாலை 3 மணி 5 மணி மாற்றங்கள்: • விழுப்புரத்திலிருந்து புதுச்சேரி செல்லும் அனைத்து வாகனங்களும் வழக்கம்போல் செல்லலாம். • புதுச்சேரியில் இருந்து விழுப்புரம் வரும் இருசக்கர மற்றும் கார் போன்ற சிறிய கனரக வாகனங்கள் வழக்கம்போல் செல்லலாம். • புதுச்சேரியில் இருந்து விழுப்புரம் பேருந்து நிலையம் வரும் அரசு மற்றும் தனியார் பேருந்துகள்: 1. கோலியனூர் X ரோடு – ஆழங்கால் – பாணாம்பட்டு – ஹவுசிங் போர்டு (சவிதா தியேட்டர்) ரெயில்வே ஜங்ஷன் வழியாகவோ (அல்லது) 2. கோலியனூர் X ரோடு – ஆழங்கால் சுந்தரி பாளையம் ஜானகிபுரம் பைபாஸ் புதிய புறவழிச்சாலையை பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பொதுமக்கள் போக்குவரத்து மாற்றத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மாவட்ட காவல்துறை சார்பாக கேட்டுக்கொள்கிறோம் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# காதலியை கொன்றது போலீசுக்கு தெரிய வந்ததால் தாயுடன் ஏரியில் குதித்து வாலிபர் தற்கொலை



கிருஷ்ணகிரி, ஜூலை 1

கிருஷ்ணகிரி மாவட்டம் தளி அருகே உப்பாரப்பள்ளி கிராமத்தை சேர்ந்தவர் ராஜசேகர் (30 வயது). இவர், கெலமங்கலம் சின்னட்டி பேருந்து நிறுத்தம் அருகில் ஜெராக்ஸ் கடை நடத்தி வந்தார். ராஜசேகருக்கும், பக்கத்து வீட்டில் வசிக்கும் ருத்ரப்பா என்பவருக்கும் வழி பிரச்சினை தொடர்பாக முன்விரோதம் இருந்ததாக தெரிகிறது.

இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு ராஜசேகர், தனது கடை உரிமையாளர் ராஜேஷ்குமார் மற்றும் நண்பர்களுக்கு கடிதம் ஒன்றை எழுதி வாட்ஸ்அப்பில் அனுப்பி உள்ளார். அந்த கடிதத்தில், 'நள்ளிரவில் நானும், என்னுடைய தாய் மஞ்சுளாவும் (56 வயது) தற்கொலை செய்து கொள்கிறோம். அதற்கு காரணம் பக்கத்து வீட்டை சேர்ந்த ருத்ரப்பா, அவருடைய குடும்பத்தினர்தான். அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். என்னையும், எனது தாயையும் ஒரேகுழியில் புதைக்க வேண்டும்' என்று குறிப்பிட்டுள்ளார்.

வாட்ஸ்அப்பில் வந்த கடிதத்தை பார்த்து அதிர்ந்த ராஜேஷ்குமார் மற்றும் நண்பர்கள் நள்ளிரவில் கெலமங்கலம் போலீசுக்கு தகவல் தெரிவித்தனர். இதனையடுத்து ராஜசேகரின் செல்போன் எங்கு உள்ளது என்பதை சிக்னல் மூலம் போலீசார் கண்டறிந்தனர். அதில் அவரது செல்போன் அருகில் உள்ள தண்டரை ஏரி பகுதியை காண்பித்தது. நேற்று அதிகாலையில் அங்கு சென்ற ஊர் பொதுமக்களும், போலீசாரும் ராஜசேகரின் கார் அங்கு நிறுத்தப்பட்டு இருந்ததை கண்டு அதிர்ச்சி அடைந்தனர்.

ஏரியில் தாய், மகன் இருவரும் உடலை கட்டிக்கொண்டு தண்ணீருக்குள் பிணமாக கிடந்ததை கண்டுபிடித்தனர். அவர்கள் இருவரது உடல்களையும் மீட்ட போலீசார், பிரேத பரிசோதனைக்காக தேன்கனிக்கோட்டை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதுதொடர்பாக வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை நடத்தினர்.

இதற்கிடையே கர்நாடக மாநிலம் மண்டியா மாவட்டம், ஹலகூர்பகுதியை சேர்ந்த போலீசார் நேற்று காலையில் ராஜசேகரை தேடி வந்தனர். அப்போது தாய், மகன் இருவரும் ஏரியில் குதித்து தற்கொலை செய்து கொண்டது தெரிய வந்ததை கண்டு அவர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

காரணம் ராஜசேகருக்கு பெங்களூருவில் பியூட்டி பார்லர் நடத்தும் நளினி என்ற காதலி இருந்ததும், வேறு ஒரு பெண்ணை திருமணம் செய்ய திட்டமிட்டு, கடந்த வாரம் காதலியை, ராஜசேகர் எரித்துக்கொன்றதும் தெரிய வந்தது. இந்த கொலை தொடர்பாக நேற்று முன்தினம் கர்நாடக போலீசார் செல்போனில் பேசி நேரில் விசாரணைக்கு வர இருப்பதாக ராஜசேகரிடம் கூறியுள்ளனர். கொலை வழக்கில்தான் போலீசில் சிக்கி கொண்டதை அறிந்து தனது தாயாருடன் சேர்ந்து அவர் தற்கொலை செய்து கொண்டது விசாரணையில் தெரிய வந்துள்ளது. இந்த சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# பாலியல் குற்றவாளிகளை 8 பிரிவுகளாக வகைப்படுத்தி கண்காணிக்கும் தமிழக போலீஸ்

சென்னை, ஜூலை 1

தமிழகத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிராக குற்றங்களே நடைபெறாத ஒரு தமிழகத்தை உருவாக்க வேண்டும் என்பதை. தன்னுடைய கனவாக நினைத்து முதல்அமைச்சர் விஜய் செயல்பட்டு வருகிறார்.

அவரது கனவை நனவாக்கும் வகையில் தென்மாவட்டங்களில் பாலியல் குற்றவாளிகளை ஒழித்துக்கட்டுவதற்காக ஒரு சிறப்பு அதிரடி திட்டம் ஒன்றை, தென்மண்டல ஐ.ஜி. விஜயேந்திரபிதாரி தொடங்கி சிறப்பாக செயல்படுத்தி வருகிறார்.

அந்த திட்டம் தமிழகம் முழுவதும் செயல்படுத்தப்படும் என்று டி.ஜி.பி. மகேஷ்குமார் அகர்வால் அறிவித்துள்ளார். அதற்கான நடவடிக்கையும் தொடங்கிவிட்டதாக அவர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து விஜயேந்திர பிதாரி நேற்று அளித்த சிறப்பு பேட்டி வருமாறு:



நான் சர்வதேச போலீசில் சில ஆண்டுகள் பணியாற்றியுள்ளேன். சர்வதேச போலீசில் பாலியல் குற்றவாளிகளை 8 வகைகளாக பிரித்துள்ளனர். அவர்கள் செய்யும் குற்றங்களின் தன்மைக்கேற்ப தனித்தனி வண்ணங்கள் (நிறம்) கொடுக்கப்படும். இந்த வண்ணங்களில் இடம்பெற்றுள்ள பாலியல் குற்றவாளிகள், தீவிர கண்காணிப்பு வளையத்தில் வைக்கப்படுவார்கள். அவர்கள் மீதான குற்றங்களை முறையாக கோர்ட்டில் ஆவணப்படுத்தி, உரிய தண்டனை பெற்று தருவதில் முனைப்பு காட்டப்படும்.

இதுபோன்ற திட்டத்தை தெற்கு மண்டலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும், கடந்த ஒரு மாதமாக நான் அமல்படுத்தியுள்ளேன். குற்றத்தின் தன்மைக்கேற்ப ஒவ்வொரு குற்றத்தையும் 8 வண்ணங்களாக (நிறம்) வகைப்படுத்தியுள்ளோம்.

இதில் மிகவும் அபாயகரமான பாலியல் குற்றங்கள் சிவப்பு வண்ணத்தில் இடம் பெறுகிறது. இந்த திட்டம் தென் மாவட்டங்களில் நல்ல பலனை கொடுக்க தொடங்கியுள்ளது.

இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழகத்தில் ஆவின் பாலுக்கு தட்டுப்பாடா? அரசு விளக்கம்

சென்னை, ஜூலை 1

'ஆவின்' நிறுவனத்தை விட தனியார் நிறுவனங்கள் கூடுதல் விலை கொடுத்து பாலை கொள்முதல் செய்வதால் அவர்களுக்கு பால் உற்பத்தியாளர்கள் முக்கியத்துவம் கொடுத்து வருகின்றனர். எனவே ஆவின் பால் கொள்முதல் குறைந்து, சப்ளை 30 சதவீதம் பாதிக்கப்பட்டுள்ளது என்று தமிழ்நாடு பால் முகவர்கள் தொழிலாளர்கள் நலச்சங்கம் சார்பில் தகவல் தெரிவிக்கப்பட்டது. இந்த தகவலை 'ஆவின்' நிறுவனம் மறுத்துள்ளது.

இதுதொடர்பாக அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

ஆவின் நிறுவனம், சென்னை முழுவதும் அனைத்து வகையான பால் பாக்கெட்டுகளையும் தடையின்றி தொடர்ந்து வினியோகித்து வருகிறது. சராசரியாக சென்னையில் நாளொன்றுக்கு நுகர்வோர்களுக்கு சுமார் 14.50 லட்சம் லிட்டர் பால் சப்ளை செய்யப்படுகிறது.




கடந்த ஆண்டு விற்பனையுடன் ஒப்பிடுகையில் 2025 ஜூன் மாதம் அன்றாடம் 14.46 லட்சம் லிட்டர் பால் விற்பனைசெய்யப்பட்டது. இந்த ஆண்டு ஜூன் மாதம் அன்றாடம் 14.82 லட்சம் லிட்டர் பால் விற்பனை நடைபெறுகிறது. இது 0.36 சதவீதம் அதிகரிப்பு ஆகும். அதாவது, பால் வினியோகம் 36 ஆயிரம் லிட்டர் அதிகரித்துள்ளது. எந்தவொரு பால் சப்ளையும் குறைக்கப்படவில்லை. நுகர்வோர்களுக்கு பால் தடையின்றி கிடைப்பதை உறுதி செய்வதில் ஆவின் நிறுவனம் உறுதியாக உள்ளது. எனவே ஆவின் பாலுக்கு தட்டுப்பாடு என்பது தவறான தகவல் ஆகும். ஆவின் பால் வினியோகம் வழக்கம் போல் தொடரும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# த.வெ.க பெண்களை விமர்சித்த வழக்கு: பொன்ராஜுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்ய தடை

சென்னை, ஜூலை 1

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜய்க்கு ஆதரவாக பேட்டியளித்த பெண் தொண்டர்களை இழிவாக விமர்சித்ததாக, அரசியல் விமர்சகரும், மறைந்த முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் ஆலோசகருமான பொன்ராஜ் மீது சென்னை மத்திய குற்றப்பிரிவு போலீசாரும், கடலூர் போலீசாரும் தனித்தனியாக வழக்குகளை பதிவு செய்துள்ளனர்.

இந்த 2வழக்குகளையும் ரத்து செய்யக் கோரி சென்னை ஐகோர்ட்டில் பொன்ராஜ் மனு தாக்கல் செய்தார். இந்த மனுவை விசாரித்த ஐகோர்ட்டு, பொன்ராஜுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யக்கூடாது என்று தடை விதித்தது.



இந்தநிலையில், இந்த வழக்கு நீதிபதி ஜி.கே. இளந்திரையன் முன்பு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, பதில் மனு தாக்கல் செய்ய போலீஸ் தரப்பில் அவகாசம் கேட்கப்பட்டது. இதை ஏற்றுக்கொண்ட நீதிபதி, விசாரணையை ஜூலை 6ந்தேதிக்கு தள்ளிவைத்தார்.

அதுவரை குற்றப்பத்திரிகையை தாக்கல் செய்ய ஏற்கனவே விதிக்கப்பட்ட தடையை நீட்டித்து உத்தரவிட்டார்.

தின கனி
NAMADHU DHINA KANI DAILY MORNING NEWSPAPER
PRESS REGISTER GENERAL OF INDIA
PRGI NO TNTAM/2023/88253
01.07.2026



# மார்பகப் புற்றுநோயை முன்கூட்டியே கண்டறிய நடமாடும் மேமோகிராம்' வாகனச் சேவை: சென்னை காவேரி மருத்துவமனை மற்றும் லயன்ஸ் மாவட்டம் 3241Cன் கூட்டு முயற்சி

மருத்துவச் சேவையில் தமிழ்நாட்டில் முன்னணி வகிக்கும் சென்னை காவேரி மருத்துவமனை, லயன்ஸ் கிளப் ஆஃப் சென்னை KVG அறக்கட்டளை மற்றும் லயன்ஸ் மாவட்டம் 3241C ஆகியவற்றுடன் இணைந்து, தனது சமூகப் பொறுப்புணர்வு (CSR) திட்டத்தின் கீழ் 'நடமாடும் மேமோகிராம்' வாகனச் சேவையைத் தொடங்கியுள்ளது.

நவீன மேமோகிராம் சாதனம் பொருத்தப்பட்ட இந்த நடமாடும் மருத்துவ ஊர்தியை, தமிழ்நாடு அரசின் உணவு மற்றும் நுகர்பொருள் வழங்கல் துறை அமைச்சர் ப. வெங்கடரமணன் அவர்கள் கொடியசைத்துத் தொடங்கி வைத்தார். இந்தச் சேவையின் தொடக்க விழாவில் பேசிய லயன்ஸ் சர்வதேச அமைப்பின் 3241C மாவட்ட ஆளுநர், PMJF லயன் எஸ். போஸ், "தமிழ்நாட்டில் பெண்களைப் பாதிக்கும் பொதுவான புற்றுநோய்களில் மார்பகப் புற்றுநோய் தொடர்ந்து முதன்மையாக உள்ளது. விழிப்புணர்வு இல்லாமை மற்றும் போதிய மருத்துவ வசதிகள் தங்களுக்கு அருகில் கிடைக்காத காரணத்தால், பல பெண்கள் சரியான நேரத்தில் இதற்கான பரிசோதனையைச் செய்துகொள்வதில்லை. இத்திட்டத்தின் மூலம் நகர்ப்புறங்கள், புறநகரங்கள் மற்றும் கிராமப்புறங்களில் உள்ள பெண்கள் வசிக்கும் இடத்திற்கு மிக அருகிலேயே இப்பரிசோதனை வசதியைக் கொண்டு சேர்ப்பதே எங்களது நோக்கமாகும். தமிழ்நாட்டின் முன்னணி மருத்துவக் குழுமங்களில் ஒன்றான காவேரி மருத்துவமனையுடன் இணைந்து இந்த சமூக நலத் திட்டத்தில் பங்கேற்பதில் நாங்கள் பெருமகிழ்ச்சி அடைகிறோம்" என்றார்.



கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அருகே உள்ள பாரூர் உட்கோட்டம் நாகரசம்பட்டி காவல் சரகத்தில் உட்பட்ட கூரம்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளி மற்றும் பாலேகுளி அரசு உயர்நிலைப் பள்ளியில் தமிழக காவல் துறையின் கிருஷ்ணகிரி மாவட்ட சிங்கப் பெண் காவல் உதவி ஆய்வாளர் .திருமதி சங்கீதா குழுவினர் பள்ளி மாணவி மாணவர்களுக்கு பாதுகாப்பு குறித்து போதை பொருள் குறித்தும் குழந்தைகளுக்கு ஏதேனும்பாதிப்புஏற்பட்டால்உடனடியாக1091என்றஎண்ணிற்குதகவல்தெரிவிக்குமாறு விழிப்புணர்வை ஏற்படுத்தினார் இதில் நாகரசம்பட்டி உழவு பிரிவு சிஜடி மூர்த்தி கலந்து கொண்டனர்

# சிறுமி குளிப்பதை வீடியோ எடுத்த இருவர் போக்சோ வழக்கில் கைது

திருவாரூர், ஜூலை 1

திருவாரூர் மாவட்டம் வலங்கைமான் அருகே உள்ள ஒரு கிராமத்தில் நேற்று முன்தினம் 17 வயது சிறுமியும், அவருடைய தாயாரும் தங்களுடைய வீட்டின் பின் பகுதியில் குளித்து கொண்டிருந்தனர். அவர்கள் குளிப்பதை அங்கு மறைந்திருந்த இருவர், செல்போன் மூலம் வீடியோவாக பதிவு செய்துள்ளனர்.

இதை பார்த்த சிறுமி கூச்சல் போட்டுள்ளார். இதனால் வீடியோ எடுத்த இருவரும் அங்கிருந்து ஓட்டம் பிடித்துள்ளனர். இதுகுறித்து சிறுமி தரப்பில் வலங்கைமான் போலீஸ் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டது. அதன்பேரில் போலீசார் விசாரணை நடத்தினர்.

விசாரணையில், உத்தாணி கீழத்தெருவை சேர்ந்த ராஜலிங்கம் மகன் ராஜதுரை (30 வயது), அவருடைய நண்பர் பாபநாசம் பூஞ்சேரி கீழத்தெருவை சேர்ந்த தர்மேந்திரன் மகன் விக்னேஷ் (26 வயது) ஆகிய இருவரும் வீடியோ எடுத்தது தெரியவந்தது. இதுதொடர்பாக ராஜதுரை, விக்னேஷ் இருவர் மீதும் போக்சோ வழக்குப்பதிவு செய்த போலீசார், இருவரையும் கைது செய்தனர்.

# தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத் தில் முதல் துணைவேந்தர் வ. அய். சுப்பிரமணியன் நினைவேந்தல் நிகழ்வு



தஞ்சாவூர் ஜூலை 1

தஞ்சாவூர் தமிழ் பல்கலைக்கழகத் தில் முதல் துணை வேந்தர் வ . அய். சுப்பிரமணியத்தின் 17 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நடை பெற்றது பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள வ. அய்.சுப்ரமணியம் நினைவிடத்தில் துணைவேந்தர் குழு உறுப்பினர் பாரத ஜோதி தலைமையில், பதிவாளர் பொறுப்பு பன்னீர் செல்வம் முன்னிலையில் மாலை அணிவித்து, மலர்த் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது

இந்நிகழ்ச்சியில் மொழி பெயர் ப்பு துறைத் தலைவரும், மக்கள் தொடர்பு அலுவலருமான பொறுப்பு முருகன் ,சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் துறை தலைவர் கவிதா ,தூய்மை பிரிவு மேற்பார்யாளர் சுகுமாரன்,பல்கலைக்கழக தலைமை காவலர் பொறுப்பு வேலுசாமி, தோட்ட பிரிவு மேற்பார்வையாளர் சேவியராஜ், அலுவலக நிலைப்பணியாளர்கள், மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்

# இன்றைய ராசி பலன்கள் (01.07.2026)

மேஷம்: புதிய முயற்சிகளில் முன்னேற்றம். குடும்பத்தில் மகிழ்ச்சி. செலவுகளில் கட்டுப்பாடு நல்லது.

ரிஷபம்: பணவரவு சீராக இருக்கும். வேலை தொடர்பான நல்ல செய்தி கிடைக்கலாம்.

மிதுனம்: முக்கிய முடிவுகளை அமைதியாக எடுக்கவும். நண்பர்களின் ஆதரவு கிடைக்கும்.

கடகம்: உடல்நலத்தில் கவனம் தேவை. தேவையற்ற வாக்குவாதங்களைத் தவிர்க்கவும்.

சிம்மம்: தொழிலில் வளர்ச்சி வாய்ப்பு. குடும்பத்தினருடன் நல்ல நேரம் அமையும்.

கன்னி: பயணவாய்ப்புகள் உருவாகலாம். பொருளாதாரத்தில் முன்னேற்றம் காணலாம்.

துலாம்: நிலுவையில் இருந்த வேலைகள் முடிவடையும். உறவுகளில் புரிதல் அதிகரிக்கும்.

விருச்சிகம்: பொறுமையுடன் செயல்பட்டால் வெற்றி. முதலீட்டில் கவனம் அவசியம்.

தனுசு: புதியவாய்ப்புகள்கிடைக்கலாம். மாணவர்களுக்கு சாதகமான நாள்.

மகரம்: பணியில் பொறுப்புகள் அதிகரிக்கும். திட்டமிட்டு செயல்பட்டால் நல்ல பலன்.

கும்பம்: நீண்டநாள்ஆசைகள்நிறைவேற வாய்ப்பு. குடும்ப ஆதரவு கிடைக்கும்.

மீனம்: மனநிம்மதி அதிகரிக்கும். வருமானம் உயரக்கூடிய வாய்ப்பு உள்ளது.

# புதுக்கோட்டை மாவட்டத்தில் சாலையில் பஸ் மறியல்



புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார் கோவில் தாலுகா கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள சேமங்கோட்டை விளக்கில் இருந்து பாதரக்குடி வரை ரோடு மிகவும் மோசமாக இருக்கிறது 10 ஆண்டுகளுக்கும் மேலாக இந்த ரோடு சரி செய்து தரவில்லை என பொதுமக்கள் அதிகாரிகளிடம் பலமுறை மனு கொடுத்தும் எந்த ஒரு நடவடிக்கையும் இல்லை என பொதுமக்கள் திரண்டு கிழக்கு கடற்கரைச் சாலையில் பஸ் மறியல் செய்யப் போவதாக கிடைத்த தகவலை அடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றோம் தமிழக வெற்றி கழகம் கிழக்கு ஒன்றிய செயலாளர் முகமது காரிஸ் அவர்கள் சம்பவ இடத்திற்கு வந்து தங்கள் கோரிக்கைகள் உடனடியாக சரி செய்து தரப்படும் என வாக்குறுதி கொடுத்ததன் பேரிலும் மாவட்டத் துணை கண்காணிப்பாளர் உயர்திரு வெங்கடேசன் அவர்கள் அதிகாரிகளை தொடர்பு கொண்டு மக்கள் பிரச்சனைக்கு உடனடியாக தீர்வு காணுங்கள் எனக் கேட்டுக் கொண்டதற்கு இணங்கவும் மறியல் போராட்டம் கைவிடப்பட்டது. புதிதாக பொறுப்பேற்றுள்ள அரசு எங்கள் கோரிக்கையை நிறைவேற்றி தர வேண்டும் என கேட்டுக்கொண்டது மட்டுமல்லாமல் இல்லாமல் நிறைவேற்றவில்லை என்றால் பாதிக்கப்பட்டகிராமமக்களைதிரட்டிமிகப்பெரிய போராட்டம் நடைபெறும் என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# "பீட்சா 4" திரைப்படத்தின் மோஷன் போஸ்டர் வெளியீடு




'பீட்சா' திரைப்படத்தின் நான்காவது பாகத்தை சி.வி. குமார் எழுதி தயாரிக்கிறார். இவர், தனது திருக்குமரன் என்டர்டெயின்மென்ட் பதாகையின் கீழ் இப்படத்தைத் தயாரிக்கிறார். ஸ்ரீஷ் விஜய் இயக்கவுள்ள இத்திரைப்படத்தில்பிக்பாஸ்தமிழ்புகழ்பிரஜின்முக்கியகதாபாத்திரத்தில் நடிக்கிறார். இவருடன் சமூக வலைதள பிரபலம் ஹுசைன் உள்ளிட்ட பலரும் நடிக்கவுள்ளனர்.

'பீட்சா' திரைப்படத்தின் நான்காவது பாகம் விரைவில் திரைக்கு வரும் என்று ரசிகர்களிடையே எதிர்பார்க்கப்பட்டு வந்தது. இந்நிலையில் 'பீட்சா 4' திரைப்படத்தின் மோசன் போஸ்ட்டரை படத்தின் தயாரிப்பாளர்கள் நேற்று வெளியிட்டனர்.

இதில் ஹீரோவாக நாசரின் மகன் அபி ஹாசன் நடிக்கவுள்ளார். இவர் இதற்கு முன்பு கடாரம் கொண்டான், சில நேரங்களில் சில மனிதர்கள் போன்ற படங்களில் நடித்தவர். இதன் படப்பிடிப்பு விரைவில் சென்னை, ஐதராபாத் போன்ற பகுதிகளில் நடைபெறவுள்ளது.

# விஷ்ணு விஷாலின் 'கட்டா குஸ்தி 2' படத்திற்கு "யு" தணிக்கை சான்றிதழ்




தமிழ் சினிமாவில் முக்கியமான நடிகர்களில் ஒருவராக வலம் வரும் விஷ்ணு விஷால் . கடந்த 2022ம் ஆண்டு விஷ்ணு விஷால், ஐஸ்வர்யா லக்ஷ்மி ஆகியோரின் நடிப்பில் 'கட்டா குஸ்தி' திரைப்படம் வெளியானது. இந்த படத்தை செல்லா அய்யாவு இயக்கி இருந்தார். இவர் விஷ்ணு விஷாலின் 'சிலுக்குவார்ப்பட்டி சிங்கம்' படத்தை ஏற்கனவே இயக்கியிருந்தார். காமெடி கலந்த கதைக்களத்தில் வெளியான இந்த படம் ரசிகர்கள் மத்தியில் ஏகபோக வரவேற்பை பெற்றது. இப்படத்துக்கு ஜஸ்டின் பிரபாகரன் இசையமைத்திருந்தார். ரூ.5 கோடி பட்ஜெட்டில் உருவான இப்படம் ரூ.30 கோடிக்கும் அதிகமான வசூலை குவித்தது.

இப்படத்தின் இயக்குனர் செல்லா அய்யாவுடன் நடிகர் விஷ்ணு விஷால் மீண்டும் கைகோர்த்து 'கட்டா குஸ்தி 2' படத்தை இயக்கியுள்ளார். இதனை விஷ்ணு விஷால் மற்றும் வேல்ஸ் பிலிம் இண்டர்நேஷனல் நிறுவனம் இணைந்து தயாரித்துள்ளது. முதல் பாகத்தை போல படத்தின் கதாநாயகியாக ஐஸ்வர்யா லட்சுமி நடித்துள்ளார். மேலும் முனிஷ்காந்த், காளி வெங்கட் மற்றும் கருணாகரன் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். இப்படத்தின் பர்ஸ்ட் லுக், செகண்ட் லுக் போஸ்டர்கள் சமீபத்தில் வெளியாகி வைரலானது.

'கட்டா குஸ்தி 2' படத்தின் அறிமுக போஸ்டரை படக்குழு சமீபத்தில் வெளியிட்டது. இதில் நடிகை ரம்யா கிருஷ்ணன் ராஜ ராஜேஸ்வரி எனும் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். படக்குழு இவர் இம்பாக்ட் பிளேயராக நடித்துள்ளதாக கூறியுள்ளது. மேலும் நடிகர்கள் யோகி பாபு, கருணாகரன், நடிகை மோக்ஷா ஆகியோர் புதிதாக இப்படத்தில் இணைந்துள்ளனர். படம் விளையாட்டு சம்பந்தப்பட்டது என்பதால் சுவாரசியம் கூடியிருக்கிறது. ஷான் ரோல்டன் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார்.

'கட்டா குஸ்தி 2' படத்தின் டீசர் மற்றும் டிரெய்லர் ஆகியவை சமீபத்தில் வெளியாகி வைரலாகின. இந்த படத்தில் விஷ்ணு லட்சுமி தம்பதிக்கு 6 வயதில் ஒரு மகள் இருப்பதுபோல் அவர்களின் குடும்ப வாழ்க்கையைச் சுற்றிக் கதை பின்னப்பட்டுள்ளது. இம்முறையும் நகைச்சுவை, சமூக, குடும்ப விமர்சனம் என்கிற அம்சத்தையே மையப்படுத்தியிருப்பதாக இயக்குநர் கூறியுள்ளார்.இப்படம் வரும் ஜூலை 3ம் தேதி வெளியாகவுள்ளது.

இப்படம் வெளியாக இன்னும் 3 நாட்களே உள்ள நிலையில், தணிக்கை வாரியம் இந்த படத்திற்கு "யு" வழங்கியுள்ளது.

# ஈவ்டீசிங் செய்த வாலிபரின் தலையை உடைத்த கயாடு லோஹர்.. இணையத்தில் வைரலாகும் பேச்சு

கன்னட திரைப்படமான 'முகில்பேட்டை' மூலம் திரையுலகில் அறிமுகமான நடிகை கயாடு லோஹர், தற்போது தென்னிந்திய திரையுலகின் கவனம் ஈர்த்துவரும் இளம் நடிகைகளில் ஒருவராக உள்ளார். மலையாளம், தெலுங்கு, தமிழ் உள்ளிட்டபலமொழித்திரைப்படங்களில்நடித்துவரும்அவர்,தமிழில்பிரதீப்ரங்கநாதன்நடித்த'டிராகன்'திரைப்படத்தின் மூலம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பைப் பெற்றார். தொடர்ந்து மலையாளத்தில் டொவினோ தாமஸுடன் நடித்த 'பள்ளிச்சட்டம்பி' திரைப்படமும் அவருக்கு பாராட்டுகளை பெற்றுத் தந்தது. தற்போது இயக்குநர் மாரி செல்வராஜ் இயக்கும் புதிய படத்திலும், நடிகர் சூர்யாவுடன் இணையும் திரைப்படத்திலும் நடித்து வருகிறார்.

இந்த நிலையில், அண்மையில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்ட கயாடு லோஹர், தனது பள்ளிப் பருவத்தில் நடந்த அதிர்ச்சிகரமான சம்பவம் குறித்து மனம் திறந்து பேசியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில், "நான் பத்தாம் வகுப்பு படித்துக்கொண்டிருந்தபோது, வீட்டிற்கு அருகே இருந்த டியூஷன் வகுப்புக்கு செல்வது வழக்கம். அப்போது ஒரு பையன் என்னை தொடர்ந்து ஈவ்டீசிங் செய்தான். முதல் நாளில் அதை பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. இரண்டாவது நாளும் அதேபோல் நடந்தது. ஆனால், மூன்றாவது முறையும் அவன் எல்லை மீறியபோது எனக்கு கடுமையான கோபம் வந்தது. அப்போது அருகில் இருந்த ஒரு பெரிய கல்லை எடுத்து அவனது தலையில் வீசினேன். அவனுக்கு தலையில் காயம் ஏற்பட்டு ரத்தம் கொட்டியது. அதன்பிறகு நான் அங்கிருந்து உடனே சென்றுவிட்டேன்", என்று தெரிவித்தார்.

மேலும், "பார்ப்பதற்கு நான் மிகவும் அமைதியானவளாகத் தோன்றலாம். ஆனால், யாராவது தவறு செய்தால் அமைதியாக இருக்கக் கூடாது. அதற்கு எதிர்த்து நிற்க வேண்டும்; தேவையானால் திருப்பி அடிக்கவும் வேண்டும்", என்று கயாடு லோஹர் கூறியுள்ளார்.

நடிகையின் இந்த வெளிப்படையான பேச்சு தற்போது சமூக வலைதளங்களில் வேகமாக பரவி, ரசிகர்கள் மத்தியில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது.

# வைபவ் சூர்யவன்ஷி காத்திருக்க வேண்டும்: துணை பயிற்சியாளர் தகவல்



அயர்லாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்ட இந்திய அணி, முதல் டி20 ஆட்டத்தில் 34 ரன்கள் வித்தியாசத்தில் அதிர்ச்சி தோல்வியை சந்தித்தது. இதனையடுத்து நடைபெற்ற 2வது டி20 ஆட்டத்தில் முதலில் பேட்டிங் செய்த அயர்லாந்து, 20 ஓவர்களில் 8 விக்கெட் இழப்புக்கு 154 ரன்கள் குவித்தது.155 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய இந்திய அணி 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 153 ரன்கள் மட்டுமே எடுத்து தோல்வியை தழுவியது.இந்த வெற்றியின் மூலம் 2 போட்டிகள் கொண்ட டி20 தொடரை 20 என்ற கணக்கில் அயர்லாந்து கைப்பற்றி இந்தியாவுக்கு எதிராக முதல் முறையாக டி20 தொடரை வென்று புதிய வரலாறு படைத்தது. இந்த நிலையில், 2 போட்டிகளிலும் இந்திய அணியில் இடம் பெற்ற இளம் வீரர் வைபவ் சூர்யவன்ஷிக்கு வாய்ப்பு வழங்கவில்லை.

இந்த நிலையில், சர்வதேச கிரிக்கெட் போட்டியில் விளையாடுவதற்கு 15 வயதான வைபவ் சூர்யவன்ஷி தயாராக இருக்கிறார். அதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் அறிமுக வாய்ப்பை பெறுவதற்கு அணியில் உள்ள மற்ற வீரர்களுக்கு பின்பற்றிய அதே நடைமுறையை அவரும் கடந்து வர வேண்டும். தனக்குரிய சரியான வாய்ப்புக்காக காத்திருக்க வேண்டும் என இந்திய அணியின் உதவி பயிற்சியாளர் ரையான் டென்சஸ்சாட் கூறியுள்ளார்.

# தென்கொரியா அணியின் தலைமை பயிற்சியாளர் ராஜினாமா



நடப்பு உலகக் கோப்பை கால்பந்து தொடரில் 'ஏ' பிரிவில் அங்கம் வகித்த தென்கொரியா ஒரு வெற்றி (செக்குடியரசுக்கு எதிராக), 2 தோல்வி (மெக்சிகோ, தென்ஆப்பிரிக்கா அணிக்கு எதிராக) கண்டு 3வது இடம் பெற்று முதல் சுற்றோடு நடையை கட்டியது. இதற்கிடையே, தென்கொரியா அணியின் தலைமை பயிற்சியாளர் பதவியில் இருந்து ஹாங் மியுங் போ விலகி உள்ளார். அணியின் தோல்விக்கு பொறுப்பேற்பதாகவும், இதற்காக நாட்டு மக்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்வதாகவும் கூறியுள்ளார். தென்கொரியாவை சேர்ந்த 57 வயது ஹாங் மியுங் போ 2024ம் ஆண்டு ஜூலை மாதம் 2வது முறையாக தலைமை பயிற்சியாளர் ஆனார். முன்னதாக 2014ம் ஆண்டு உலகக் கோப்பையில் தென்கொரியா முதல் சுற்றுடன் வெளியேறிய போதும் அவரே பயிற்சியாள ராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஆசிய விளையாட்டு போட்டி: இந்திய மகளிர் கிரிக்கெட் அணி அறிவிப்பு



20வது ஆசிய விளையாட்டு போட்டிகள் ஜப்பானில் வரும் செப்டம்பர் 19ம் தேதி முதல் அக்டோபர் 4ம் தேதி வரை நடைபெற உள்ளது. இதில் பேட்மிண்டன், டென்னிஸ், குத்துச்சண்டை, ஹாக்கி, கால்பந்து உள்பட பல்வேறு விளையாட்டுகள் நடைபெற உள்ளது. இதில் டி20 கிரிக்கெட்டும் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில், ஆசிய விளையாட்டு போட்டியில் மகளிர் டி20 கிரிக்கெட்டில் பங்கேற்கும் இந்திய மகளிர் அணியை பிசிசிஐ இன்று அறிவித்துள்ளது.

ஹர்மன்பிரீத் கவர் தலைமையிலான இந்திய அணியில் ஸ்மிருதி மந்தனா, ஷிபாலி வர்மா, ஜெமிமா ரோட்ரிக்ஸ், தீப்தி ஷர்மா, ரிச்சா கோஷ், கமலினி, பார்தி புல்மாலி, ஸ்ரீ சரணி, ரேணுகா, கிராந்தி கவுட், அருந்ததி, ஷ்ரேயங்கா, ராதா, நந்தினி ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

முன்னதாக, ஆசிய விளையாட்டு போட்டியில் இந்திய ஆண்கள் டி20 கிரிக்கெட் அணியை பிசிசிஐ ஏற்கனவே அறிவித்துவிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.